செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 320 நாள்: 2/6/17

## பத்திரிக்கைச் செய்திக் குறிப்பு

## டாப்செட்கோ மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பொருளாதார கடனுதவிகள் வழங்கப்படும் - வேலூர் மாவட்டஆட்சித் தலைவர் தகவல்

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்கள்

### 1. தனிநபர்கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சிறுவணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ. 10.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 6% முதல் 8% வரை வட்டி வசூலிக்கப்படும். கடன் தொகையை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்த வேண்டும்.

### 2. பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

இத்திட்டம் பெண்களின் சுயசார்பு நிலையினை வலியுறுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறுவணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ. 1.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 5% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்த வேண்டும்.

### 3. மகிளாசம்ரிதி யோஜனா

தொழில் முனையும் பெண்களுக்கு சிறுகடன் வழங்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு "சிறுகடன்" வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவில் அதிகபட்சமாக 20 உறுப்பினர்கள் இருக்கலாம். இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஒருவருக்கு

அதிகபட்சம் ரூ. 50,000/- கடனுதவி 4% வட்டி விகிதத்தில் வழங்கப்படும். கடன் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

## 4. சிறுகடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தனியாக அல்லது குழுக்களாக சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு சிறுகடன் வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவில் அதிகபட்சமாக 20 உறுப்பினர்கள் இருக்கலாம். இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ. 50,000/- கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன்களுக்கு 5% வட்டி வசூலிக்கப்படுகிறது. கடன் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவேண்டும்.

## 5. போக்குவரத்து இனங்களுக்கானகாலக் கடன்

கார் / வேன் மற்றும் மினிவேன், டிராக்டர் / டிரெய்லர் (விவசாயதொழிலுக்கு) போன்றபோக்குவரத்து இனங்களுக்கு அதிகபட்சமாக ரூ. 3.13 இலட்சம் கடனுதவி 10% வட்டிவிகிதத்தில் வழங்கப்படுகிறது. கடன் தொகையை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

## 6. கடன் பெறுவதற்கானதகுதிகள்

1) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினராக இருத்தல் வேண்டும்.
2) குடும்ப ஆண்டுவருமானம் கிராமப்புறமாயின் ரூ.98,000/- மற்றும் நகர்புறமாயின் ரூ. 1,20,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
3) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4) ஒருகுடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.
5) சுய உதவி குழு தொடங்கி 6 மாதங்கள் பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) அவர்களால் தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**விண்ணப்பப் படிவம்**

விண்ணப்பப் படிவம் வேலூர் மாவட்டத்திலுள்ள இணைபதிவாளர் கூட்டுறவு சங்கங்கள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பிக்கவேண்டிய இறுதிநாள் 30.06.2017**

பயனாளிகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனைத்து தேவையான சான்றாவணங்களுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் வளாகம், வேலூர் 30.06.2017-க்குள் சேரும் வகையில் அனுப்ப மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்கள்.

ஒம்/-சி.அ. ராமன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,

2/6/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.